**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நெய்வேலி.**

**DVC.No. 7 / 2021**

**PW–1**

2026–ம் ஆண்டு ஜீலை மாதம் 02–ம் நாள் வியாழன் கிழமை மனுதாரர் தரப்பு 1–வது சாட்சியின் சாட்சியம்.

உறுதிமொழிச்சட்டம் 1969 பிரிவு–3ன் படி 02.07.2026 அன்று மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் ஆர்.பாக்யராஜ், எம்.ஏ., பி.எல்., அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | தனசீலி | **தொழில்** | : | வீட்டுக்குடித்தனம் |
| **க/பெ.** | : | கார்மல்ராஜ் | **வசிப்பிடம்** | : | நெய்வேலி, இந்திரா நகர் |
| **வயது** | : | 63 | **தாலுக்கா** | : | குறிஞ்சிப்பாடி |

**முதல் விசாரணை:**

நான் இந்த வழக்கில் மனுதாரர் ஆவேன். நான் ஏற்கனவே முதல் விசாரணை சாட்சியம் அளித்துள்ளேன். தற்போது என் தரப்பில் கூடுதல் அவணங்களை குறியீடு செய்வதற்காக சாட்சியம் அளிக்கிறேன். கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக தாக்கல் செய்கிறேன்.

| | |
|---|---|
| **ம.சா.ஆ. 9** | எதிர்மனுதாரர் பெயரில் நெய்வேலி நகர காவல் நிலையத்தில் கொடுத்திருந்த புகார் மனுவிற்கு காவல் நிலையம் வழங்கியிருந்த CSR.124 /2025 **அசல்** |
| **ம.சா.ஆ. 10** | 31.12.2018 – தேதியிட்ட மனுதாரர் மருத்துவ பரிசோதனை எடுத்துக்கொண்டதற்கான அறிக்கை (எண்ணிக்கை – 2 தாள்கள்) **அசல்** |
| **ம.சா.ஆ. 11** | 18.11.2024 தேதியிட்ட சர்வே எண்.100/1 க்கான 17.11.1976 முதல் 17.11.2024 வரையிலான வில்லங்க சான்றிதழின் கணினி வழி பதிவிறக்க **நகல்** |
| **ம.சா.ஆ. 12** | எதிர்மனுதாரர் பெயரில் 30.05.2013 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் **நகல்** |
| **ம.சா.ஆ. 13** | 12.05.2023 தேதியிட்ட கடலூர் வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் உத்தரவின் **அசல்** |
| **ம.சா.ஆ.14** | எதிர்மனுதாரர் நகைகளை அடகு வைத்ததற்காக இந்தியன் வங்கி, வடக்குமேலூர் கிளையிலிருந்து 05.05.2021 தேதியிட்டு அனுப்பிய |

| | |
|---|---|
| | அறிவிப்பு **அசல்** |
| **ம.சா.ஆ.15** | எதிர்மனுதாரர் அரைகுறை ஆடையுடன் படுத்திருப்பதற்கான புகைப்படம் (எண்ணிக்கை – 3) |
| **ம.சா.ஆ.16** | மாதா எலெக்டிரிக்கல்ஸ், ஜெராக்ஸ் என்ற கடையின் புகைப்படம் மற்றும் எதிர்மனுதாரரின் பெயரில் மேற்படி கடை சம்மந்தமான விசிட்டிங் கார்டு |
| **ம.சா.ஆ.17** | மனுதாரருக்கு காயம் ஏற்பட்டுள்ளதை காண்பிக்கும் புகைப்படம் (எண்ணிக்கை – 2) (**மா.சா.ஆ.15 முதல் ம.சா.ஆ.17 வரையிலான சான்றாவணங்கள் இந்திய சாட்சிய சட்டத்தின் பிரிவு – 65(B) சான்றுடன் தாக்கல் செய்யப்பட்டது**). |
| **ம.சா.ஆ.18** | 2005– 2009 வருடத்திற்கான மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் பெயரில் உள்ள குடும்ப அட்டையின் **நகல்** |

மனுப்படி தீர்ப்பாக கேட்டுக்கொள்கிறேன்.

**(எதிர்மனுதாரர் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை செய்வதற்காக வாய்தா தேதி ஒத்திவைக்கப்படுகிறது)**